**1.நல்லாட்சி**

இந்த வழிகாட்டியானது, குடியியல் சமூக அமைப்பு ஒன்றின் முறையான விநியோக செயற்பாட்டிற்கான தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளது.[1] உதாரணம். ஒரு குடியியல் சமூக அமைப்பு ஒன்றுக்கு அதன் விவகாரங்களை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகள்

**1.1 இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 8 பொன் விதிகளையும் உட்படுத்தியதனான யாப்பு ஒன்றை குடியியல் சமூக அமைப்பானது கொண்டிருக்க வேண்டும்.**

**1.2 ஒரு குடியியல் சமூக அமைப்பானது அதன் கடிதம் மீதான பற்று மற்றும் யாப்பினிலும் சகல ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், நடபடிகள், செயன்முறைகள் முதலானவற்றிலும் விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும்.**

**1.3 ஒரு குடியியல் சமூக அமைப்பானது தன்னுடைய இலக்கு தூரநோக்கு, விழுமியம் மற்றும் கோட்பாடுகள் பற்றி தெளிவானதும் தீர்க்கமானதுமான வரைவிலக்கணத்தைக் கொண்டிருக்க வேண்டும்.**

- சகல நோக்கங்கள், இலக்குகள் மூலோபாயங்கள், நிகழ்ச்சிகள், செயற்றிட்டங்கள் இன்னபிற போன்ற குடியியல் சமூக அமைப்பால் ஈடுபட்டிருக்கின்றவை. இத்தகைய வரைவிலக்கணங்களுக்குள் கடுமையாக உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

**1.4 குடியியல் சமூக அமைப்பானது பணிப்பாளர் சபை ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்.**

1.4.1. பணிப்பாளர் சபை உறுப்பினர்களை தெரிவு செய்கின்ற நடபடியும் வகையும் நிர்ணயிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

1.4.2. பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பதவிக் காலம், தொடர்ச்சியாக இருக்கக் கூடிய பதவிக்காலங்கள் பதவிக்காலத்துக்கு முன்னர் பதவி நீக்கப்பட வேண்டியதாயின் அதற்கான நிபந்தனைகள் இன்னபிற என்பன வரையறுக்கப்பட வேண்டும்.

1.4.3 பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தன்னார்வ அடிப்படையில் சேவைபுரிய வேண்டும்.

- இது பிரயாணம் போன்ற அத்தியாவசிய செலவுகளுக்கான மீள்கொடுப்பனவுகளை உள்ளடக்கலாம்.

1.4.4 குடியியல் சமூக அமைப்பின் தூரநோக்கு, இலக்கு, பெறுமதிகள் மற்றும் கோட்பாடுகளை அமுல்படுத்துவதற்கு பணிப்பாளர்கள் சபையே பொறுப்பாக இருக்கும்.

[1] சமூகத்தின் முன்னேற்றதிற்காக பணியில் ஈடுபடும் எந்த அமைப்புகளையும் உள்ளடக்க ''சமூக அமைப்புகள்'' என்ற பதம் பரந்த நோக்கில் பாவிக்கப்பட்டுள்ளது.

**1.5 குடியியல் சமூக அமைப்பானது கண்ணியமானதும் ஒழுங்கு முறையாக வெளிப்படுத்தப்படுவதுமான முடிவெடுக்கும் நடபடியைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

1.5.1. முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்வது/நிராகரிப்பது மற்றும் தொடர்பில் வகையீட்டையும் நடபடியையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்

1.5.2 இது பணிப்பாளர் சபைக்கும் பொருந்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

1.5.3 இது நிர்வாக அலுவலர்களுக்கும் விரிபுபடுத்தப்படலாம்.

**1.6 குடியியல் சமூக அமைப்பானது பணம் சம்பந்தமான கொள்கை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

1.6.1 நன் கொடைகளைக் கையாள்வதற்கான செயன்முறை ஒன்றை அது உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

1.6.2 நிதி திரட்டல், அதிகரித்த வட்டி மற்றும் இன்னபிறவினூடாக உழைக்கப்பட்ட பணத்தை கையாள்வதற்கான செயன்முறையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.6.3 கட்டணங்கள் மற்றும் நிர்வாகக் கட்டணங்களுக்கான அமைப்பு முறை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**1.7 பணப்பெறுமதியில்லான நன்கொடைகளை கையாள்வது தொடர்பில் குடியியல் சமூக அமைப்பானது செயன்முறை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

**1.8 குடியியல் சமூக அமைப்பானது நன்கொடையாளர், பங்காளர், விநியோகத்தர்கள் தொடர்பான கொள்கையைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- அது தெரிவிற்கான செயன்முறை மற்றும் வகையினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**1.9 குடியியல் சமூக அமைப்பானது அதனது அரசியலமைப்பு, கொள்கைகள், நடபடிகள், செயன்முறைகள் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக செயன்முறை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

**1.10 குடியியல் சமூக அமைப்பானது ஒழுங்கற்ற நடத்தைகளுக்கு எதிரான பாதுகாப்பு பொறிமுறைகளை உருவாக்கியிருக்க வேண்டும்.**

1.10.1 நிதிகளை அணுகுதல் மற்றும் வளங்களை துஷ்பிரயோகம் செய்தல் உள்ளடங்கலாக

1.10.2 முடிவெடுத்தல் உள்ளடங்கலாக

1.10.3 உறவுச் சலுகை முதலானவற்றைத் தடுப்பதன் மூலம் நீதியானதும் தொடர்ச்சியானதுமான விநியோக வளத்தை உறுதிப்படுமத்தவதற்கு

1.10.4 நன்கொடையாளர்களின் முறையற்ற செல்வாக்கை தடுப்பதற்கு

1.10.5 பங்காளர்களின் முறையற்ற செல்வாக்கை தடுப்பதற்கு

**1.11 குடியியல் சமூக அமைப்பானது ஆபத்து முகாமைத்துவ கொள்கையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

1.11.1 ஏற்றுக் கொள்ளக் கூடியதான வகையுடன் கூடிய ஆய்வுச் செயன்முறையொன்றை உள்ளடக்கியதான

1.11.2 அமைதிப்படுத்தும் தெரிபுகளும் நடபடிகளும் உள்ளடக்கியதான

1.11.3 தற்செயலான நிலையை எதிர்கொள்ளக் கூடியதான வரைபுகளுக்கான வழிகாட்டிகளை உள்ளடக்கிய

**2. நெறிமுறை**

இவ்வழிகாட்டியானது குடியியல் சமூக அமைப்பு அதிகாரத்தை வரைவிலக்கணப்படுத்துகிறது. உதாரணமாக குடியியல் சமூக அமைப்பானது கதைக்கும் போதும் செயற்படும் போதும் எவரெவரின் குரல்கள் ஈடுபடலாம் போன்ற

**2.1 குடியியல் சமூக அமைப்பானது ஜனநாயக முறைப்படி நிர்வகிப்படல் வேண்டும்**

2.1.1 ஜனநாயக முறையிலான தீர்மானம் எடுத்தல்.

- பணிப்பாளர்கள் சபையினால்
- நிருவாக அலுவலர்களுக்கும் விரிபுபடுத்தப்படலாம்

**2.2 குடியியல் சமூக அமைப்பானது பங்குபற்றுனர் ஆய்வு ஒன்றை நடாத்த வேண்டும்**

2.2.1 பயனாளிகளை அடையாளம் காண்பதற்கு

1.2.2 பங்களிக்கக் கூடியவர்களை அடையாளம் காண்பதற்கு

- உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டர்கள், நன்கொடையாளர்கள், சபை உறுப்பினர்கள், அலுவலர்கள்

2.2.3 பொதுவான ஆதரவுத் தளத்தை அடையாளம் காண்பதற்காக

2.2.4 ஆதரவாளர்கள், ஊடகம், கல்வியியலாளர்கள், அரசாங்கங்கள், ஏனைய குடியியல் சமூக அமைப்புக்கள்

**2.3 குடியியல் சமூக அமைப்பானது முடிவெடுப்பதில் பங்குபெறுனர்களின் குறிப்பாக பயனாளிகளினதும் பங்களிப்பாளர்களினதும் அர்த்தமுள்ள பங்குபற்றலை உறுதிப்படுத்த வேண்டும்.**

- பயனாளிகளின் உள்வாங்கலானது குறிப்பாக நிகழ்ச்சி மட்டத்திலும் திட்டமிடலின் ஆரம்ப கட்டங்களில் இருந்தும் வினைத்திறனாக இனங்காணப்பட வேண்டும்

**3. துலாம்பரத்தன்மை**

இந்த வழிகாட்டியானது குடியியல் சமூக அமைப்பின் உள்ளார்ந்த மற்றும் வெளிவாரி தகவலை அணுகுவதையும் ஒளிவுமறைவற்ற தன்மையையும் உறுதிப்படுத்துகிறது.

**3.1 குடியியல் சமூக அமைப்பானது இப்பிரிவில் உள்ள வழிகாட்டிகளை உள்ளடக்கியதான தகவல் பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

**3.2. குடியியல் சமூக அமைப்பின் யாப்பும் மற்றும் சகல உள்வாங்கப்பட்ட கொள்கைகளும் நடபடிகளும் செயன்முறைகள் போன்ற இன்னபிறவும் பகிரங்கமாக கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.**

3.2.1. ஆண்டு அறிக்கைகள், நிதியியல் சுருக்கக் கூற்றுகள், சபைக் கூட்ட அறிக்கைகள், சபை உறுப்பினர் விபரங்கள், வட்டிப் பதிவேடுகள், பங்காளர்கள் பட்டியல், நன்கொடையாளர்கள் பட்டியல், விநியோகத்தர் பட்டியல்

3.2.2 அக்குடியியல் சமூக அமைப்பு செயற்படும் நாட்டில் சட்டப்படி பதிவு செய்வதற்கான ஆவணம் உள்ளடங்கலாக

3.2.3 குடியியல் சமூக அமைப்பால் பின்பற்றப்படும் துணை நிலைச் சட்டம்/விசேட சட்டம் உள்ளடங்கலாக

3.2.4 குடியியல் சமூக அமைப்பானது ஏதேனும் பக்கச்சார்பு இருப்பின் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

**3.3 மறைத்து வைக்கப்படும் ஏதேனும் தகவல் இருப்பின் அது வலிதான காரணமொன்றுடன் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.**

3.3.1 முக்கியத்துவம், மூலோபாய நன்மை, பாதுகாப்பு உள்ளடங்கலான காரணங்கள்

3.3.2 சாதாரண தொகைகளை வழங்கும் தனிப்பட்ட நன்கொடையாளர்கள் தொடர்ந்தும் இரகசியமாக வைத்து இருக்கப்பட வேண்டும்.

**3.4 குடியியல் சமூக அமைப்பானது நிதிக் கணக்குகளை சுயாதீனமான உதாரணமாக வெளிவாரி கணக்காய்வுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.**

**3.5 குடியியல் சமூக அமைப்பானது இலகுவான தகவல் அணுகலை உறுதிப்படுத்த வேண்டும்.**

3.5.1 இணையம் மூலமான அணுகுமுறை

3.5.2 கோரிக்கையின் பேரிலான மின்னஞ்சல் அல்லது கடிதம்

**3.6 குடியியல் சமூக அமைப்பானது வினைத்திறனான தகவல் தொடர்பாடலை உறுதிப்படுத்த வேண்டும்.**

3.6.1 இணையப் பிரசுரங்கள், செய்தியறிக்கைகள் ஊடாக வெளியீடுகள், விளம்பர பிரசாரங்கள் ஊடான சீரான வெளிப்படுத்தல்கள்

3.6.2 தொடர்பாடல் தகவல் உள்ளடங்கலாக

**4. வகைகூறல்**

இந்த வழிகாட்டியானது, குடியியல் சமூக அமைப்பானது எவ்வாறு பங்குதாரர்களால் வகைகூறலுக்கு பொறுப்பாக்கப்பட முடியும் என வரையறுக்கின்றது. உதாரணமாக குடியியல் சமூக அமைப்பின் செயற்பாடுகளுக்கு யார் பொறுப்புடைமையை ஏற்க வேண்டும் போன்ற

**4.1 குடியியல் சமூக அமைப்பானது, சபை பணிப்பாளர்கள், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளடங்கியதான வகைகூறல் கட்டமைப்பை கொண்டிருத்தல் வேண்டும்.**

4.1.1 அது யார் யாருக்கு மற்றும் எதற்காக வகைகூற வேண்டும் என வரையறுக்க வேண்டும்

- அடிப்படை நோக்கை பயன்படுத்துவதன் மூலமாக
- கட்டமைப்பில் தங்களது நிலை பற்றியும் முறையே தங்களுக்குள்ள பொறுப்புடைமை பற்றியும் அனைத்து தரப்பினரிடையேயும் ஒற்றுமை இருக்க வேண்டும்.

**4.2 குடியியல் சமூக அமைப்பானது பின்னூட்டல் யுக்தியைக் கொண்டிருக்கும்**

4.2.1 வெளிவாரி மற்றும் உள்வாரி ஆகிய இரண்டு பின்னூட்டலுக்கும் ஏற்பாடு செய்யும்

4.2.2 கேள்விகள், கருத்துரை சிபாரிசுகள், அக்கறைகள், கவலைகளை கையாளுவதற்கான தகமை

4.2.3 பின்னூட்டலை மேற்கோள் காட்டுவதற்கான செயன்முறையைக் கொண்டிருக்கும். உதாரணமாக பதிலளிப்பு பொறிமுறையொன்று

- முன்னுரிமை வழங்குவதற்கான உரைகல் உள்ளடங்கலாக
- வகைகூறல் வல்லுனர் குழு அல்லது தெரிவுக்குழுக்கள் நடவடிக்கை எடுப்பது உள்ளடங்கலாக
- பதிலளிப்புக்கான நேரவரையறை உள்ளடங்கலாக

**4.3 குடியியல் சமூக அமைப்பினது அரசியலமைப்பு மற்றும் அனைத்து ஏற்றங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளும், நடபடிகளும், செயன்முறைகளும் சரியாகவும் தெளிவாகவும் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.**

**5. நேர்மைத்திறன்**

இந்த வழிகாட்டியானது குடியியல் சமூக அமைப்பின் கீர்த்தியை கட்டியெழுப்பும் மற்றும் விருத்தி செய்யும் பொதுவான கோட்பாடுகளை வரையறுக்கிறது.

**5.1 குடியியல் சமூக அமைப்பானது நடத்தை விதிகள் கோவையினைக் கொண்டிருக்கும்**

- இது முரண்பட்ட அக்கறைகளை உள்ளடக்கியிருக்கும்.

**5.2 குடியியல் சமூக அமைப்பானது விசில் ஊதும் கொள்கை மற்றும் யுக்தியினைக் கொண்டிருக்கும்**

5.2.1 இது சான்றினை அடிப்படையாக கொண்ட அறிக்கையிடலை ஊக்கப்படுத்தும்

**5.3 குடியியல் சமூக அமைப்பானது அரசியல் ரீதியாக சுதந்திரமானதாகவும் எந்த கட்சியைச் சேராததாகவும் இருக்கும்.**

**5.4 குடியியல் சமூக அமைப்பானது சட்டத்துடன் நிலைத்து நிற்கின்றதாக இருக்கும்.**

5.4.1 உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்கள் இரண்டும்

5.4.2 சர்வதேச உடன்படிக்கைகள், உடம்பாட்டு ஒப்பந்தங்கள், சமவாயங்கள், பின்னேடுகள் உள்ளடங்கலான

5.4.3 குடியியல் சமூக அமைப்பானது சட்டங்கள், சர்வதேச உடன்படிக்கைகளை மாற்றங்களுக்காக சமர்ப்பித்தல்

5.4.4 குடியியல் சமூக அமைப்பானது இறுக்கமாக வன்முறையற்றதாக இருக்கும்

5.4.5 குடியியல் சமூக அமைப்பானது அதனுடைய தூரநோக்கு, இலக்கு பெறுமதிகள், மற்றும் கோட்பாடுகளுக்க முரணாக இருக்கின்ற சட்டங்களை அவ்வாறு செய்வதனால் ஏதேனும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமை நியமங்கள் அல்லது சமவாயங்களுக்கு முரணாகக் காணப்படும் சட்டத்தை மாததிரமே மீறலாம்.

5.5 **குடியியல் சமூக அமைப்பானது மனித உரிமைகளின் வெற்றியாளனாக இருத்தல் வேண்டும்.**

5.5.1 அது மனித உரிமை சடடங்களை பின்பற்றுவனவாகவும் போதிப்பனவாகவும் இருத்தல் வேண்டும்.

5.5.2 அது பயனாளிகளின் கலாசாரம், நம்பிக்கைகள், கௌரவத்தை பாதுகாக்க வெண்டும்

5.5.3 அது பன்மைத்துவத்தை ஊக்குவிக்க வேண்டும்

5.5.4 அது எச் சந்தர்ப்பத்திலும் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படக் கூடாது.

5.6 **குடியியல் சமூக அமைப்பானது சர்வதேச கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்துப் போதல் வேண்டும்.**

5.7 **குடியியல் சமூக அமைப்பானது பன்மைத்துவ நிதித்தளத்திற்காக கடுமையாக உழைத்தல் வேண்டும்.**

5.8 **குடியியல் சமூக அமைப்பானது ஏனைய குடியியல் சமூக அமைப்புகளுடன் போட்டியிடுதல் கூடாது.**

5.8.1 அது நடைமுறையிலிருக்கும் எனைய குடியியல் சமூக அமைப்புக்களிடமிருந்து தனித்துவமான தூர நோக்கு மற்றும் இலக்ககளைத் தேடல் வேண்டும்.

5.8.2 மற்றைய குடியியல் சமூக அமைப்புகளுடன் மேவும் நிலை ஏற்படுகையில் அவற்றுடன் பங்குடைமைகளை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்

5.9 **குடியியல் சமூக அமைப்பானது வினியோக வழிமுறைகள் மற்றும் இறுதி முடிவுகள் தொடர்பில் சமமாக கவனமும் முக்கியமும் வழங்கல் வேண்டும்.**

5.10 **குடியியல் சமூக அமைப்பினுடைய பெறுபேறானது முற்று முழுதாக நிதியில் தங்கியிராது சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள் மற்றும் தாக்கங்களிலும் தங்கியிருத்தல் வேண்டும்**

5.10.1 குடியியல் சமூக அமைப்பானது பணத்திற்கான பெறுமதியை வெளிக்காட்டல வேண்டும்

5.10.2 குடியியல் சமூக அமைப்பானது கட்டாயமாக இலாப நோக்கற்று இருத்தல் வேண்டும்

- அதன் தூரநோக்கு , இலக்கு, பெறுமதி, மற்றும் கோட்பாடுகளை விரிவுபடுத்தும் போது எஞ்சியவை மீள முதலிடப்படல் வேண்டும்.

5.11 **குடியியல் சமூக அமைப்பானது அதன் யாப்பு, கொள்கைகள், நடபடிகள், செயன்முறைகளை அபிவிருத்தி செய்யும் போது அல்லது உள்வாங்கும் போது உருவாக்கப்பட்ட உயர்ந்த நடைமுறையைப் உபயோகிக்க வேண்டும்.**

5.12 **குடியியல் சமூக அமைப்பானது தர முகாமைத்துவ வழிமுறையொன்றை அமுல்ப்படுத்த வேண்டும்**

5.12.1 ஆராய்ச்சியில் முறையான வாசிப்பு நடபடிகள் உள்ளடங்கலாக

5.12.2 அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளுக்கான அனுமதிக் கட்டமைப்பு உள்ளடங்கலாக

5.12.3 தவறை நிரூபிக்கும் பொறிமுறைகள் உள்ளடங்கலாக

## 6. கண்காணிப்பு

இவ் வழிகாட்டியானது இடைக்காலத்தின் போதும் முடிவை நோக்கியும் முடிவின் பின்னரும் இலக்குகளுடன் ஒத்திருக்கக் கூடிய தன்மையை உறதிப்படுத்துவதற்காக செயற்றிட்டங்களை அல்லது நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணிப்பதற்கான கோட்பாடுகளை வரைவிலக்கணப்படுத்துகிறது. மேலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதிகள், கோட்பாடுகளுக்கு எதிராக அரச சார்பற்ற அமைப்புகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதையும் உள்ளடக்குகின்றன.

**6.1 குடியியல் சமூக அமைப்பானது அதன் யாப்பு மற்றும் உள்வாங்கப்பட்ட அனைத்துக் கொள்கைகள், நடபடிகள், செயன்முறைகள் இன்னபிறவற்றுடன் ஒத்தியங்குவதை உறுதிப்படுத்த உள்ளகக் கணக்காய்வுகளை நடத்துதல் வேண்டும்.**

- தேவைப்படுகையில் அவற்றைத் தரவேற்றம் செய்வது உள்ளடங்கலாக

**6.2 குடியியல் சமூக அமைப்பானது சபை, நன்கொடையாளர்கள் மற்றும் வினியோகஸ்தர்களுக்காக பெறுபேற்று மதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்.**

- மேலதிகாரிகள், துணையாளர்கள் மற்றும் சக ஊழியர்களின் மீளாய்வு உள்ளடங்கலாக

**6.3 குடியியல் சமூக அமைப்பானது இலக்குகள் மற்றும் உருவாக்கப்பட்ட நியமங்கள் தொடர்பில் அதனுடைய வேலையின் முடிவுகள் தொடர்பான அடிப்படை நோக்கு ஒப்பீடுகளை நடத்துதல் வேண்டும்.**

6.3.1 அது அலகுவாக எண்ணப்படக் கூடிய வழிவகைகளுக்குப் பதிலாக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வழிவகைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

- விநியோகம் , செலவு, தரம், வள முகாமைத்துவம், மற்றும் முடிவெடுத்தல் என்பனவற்றின் அடிப்படையில் அமைந்த வெளியீடுகளின் வினைத்திறனை நிரூபிப்பதாக இருத்தல் வேண்டும்.
- அது, கொள்கைகள், பெறுமதிகள், விதிகள், நியமங்கள் இன்னபிறவற்றவுடன் ஒத்துதியங்குவதை வெளிப்படுத்த வேண்டும்.

6.3.2 அது ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாட்டு திட்டமிடலுக்கு எதிரான அதன் வளர்ச்சியை அடிக்கடி மதிப்பிடுவதாக இருத்தல் வேண்டும்

6.3.3 நிகழ்ச்சித் திட்டம் அல்லது செயற்றிட்டத்தின் முடிவில் ஒரு மதிப்பீட்டை நடத்துவதாக இருத்தல் வேண்டும்.

6.3.4 நிகழ்ச்சித் திட்டம் அல்லது செயற்றிட்டத்தின் பின்னர் அது அடிக்கடியான மதிப்பீடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**6.4 குடியியல் சமூக அமைப்பானது அதன் வேலைத்திட்டத்தின் தாக்கம் தொடர்பில் பயனாளிகளிடம் இருந்து நேரடியாக தனிப்பட்ட அறிக்கைகளையும் சுருக்க அறிக்கைகளையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.**

**6.5 குடியியல் சமூக அமைப்பானது அதனுடைய மூலோபாயத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டமிடல்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை உள்வாங்க வேண்டும்.**

- கண்காணிப்பு நோக்கத்திற்காக வரவு செலவுத்திட்டத்தில் பணத்தை ஒதுக்கீடு செய்தல்

**6.6 குடியியல் சமூக அமைப்பானது கூறப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், இலக்குகள், நியமங்கள் இருந்து ஏதேனும் வேறுபாடுகள் அல்லது குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும்.**

- கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட உள்ளார்ந்த அறிவின் மூலம் நிறைவேற்றம், திட்டமிடல் போன்ற நிகழ்ச்சிகளில் தேவையான பொருத்தமான மாற்றங்களை செய்ய வேண்டும்.

## 7 நிலையாதாரம்

இவ் வழிகாட்டியானது சமூகங்கள் மற்றும் மக்கள் தொடர்பான குடியியல் சமூக அமைப்பின் சேவை மற்றும் அவை செயற்படுகின்ற சூழ்நிலை என்பனவற்றின் நீண்டகாலத் தாக்கத்தில் கரிசனை கொள்வதாகும். மேலும் குடியியல் சமூக அமைப்பின் நீண்டகால இருக்கை என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

7.1 **குடியியல் சமூக அமைப்பானது பூமியில் வாழும் அனைத்த உயிர்களினுடையவும் உரிமைகள் தொடர்பில் அக்கறையாய் இருத்தல் வேண்டும்.**

- சுற்றாடல் உள்ளடங்னலாக

7.2 **குடியியல் சமூக அமைப்பினுடைய மற்று முழுதான இலக்கு யாதெனில் பயனாளிகளின் சொந்த அபிவிருத்தி தொடர்பில் அவர்களே பொறுப்புடைமையை ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் அவர்களை வலுவூட்டுதல் ஆகும்.**

7.2.1 மக்களை அவர்களுக்காக சிந்திக்க, கதைக்க, மற்றும் செயற்பட வலுவூட்டல்

- தகவல் பரிமாறுகையின் ஊடாக
- ஆற்றல் அபிவிருத்தியின் ஊடாக

7.2.2 பிரச்சனைகளுக்கான அடிப்படைக் காரணங்களைத் தேடுவதன் மூலம்

7.3 **குடியியல் சமூக அமைப்பானது நிகழ்ச்சித் திட்டங்களுக்கான 10 முதல் 20 ஆண்டுகள் வரையான மூலோபாயத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்**

7.3.1 உடனடிப் பொருத்துகைகளுக்கு மாற்றீடாக நீண்ட கால மூலோபாயங்களை உறுதிப்படுத்துவதற்கு

7.3.2 உதவிகளை அமுல்படுத்துவதற்கு குறுகிய கால செயற்றிட்டங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்

7.4 **குடியியல் சமூக அமைப்பானது மாற்றமடையும் சூழ்நிலைகளை உள்வாங்க ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்ளல் வேண்டும்.**

- அதனது கொள்கைகள், நடபடிகள், செயன்முறைகள் போன்ற அனைத்திலும் இலகுபடுத்தலையும் பதிலளிப்புத் தன்மையையும் உள்வாங்குவதன் மூலம்

7.5 **குடியியல் சமூக அமைப்பானது தொடர்ச்சியான அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் ஈடுபடல் வேண்டும்.**

7.5.1 பெறப்பட்ட அறிவு, அனுபவம், மீளளிப்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு

7.5.2 யாப்பு, மற்றும் ஏனைய அனைத்துக் கொள்கைகள், நடபடிகள், செயன்முறைகள் போன்ற அனைத்தும் உள்ளடங்கலாக

7.5.3 தேவைக்கேற்ப புதிய கொள்கைகள், நடபடிகள், செயன்முறைகள் போன்றவற்றை உருவாக்கக் கூடியதாகவிரத்தல் வேண்டும்.

7.6 **குடியியல் சமூக அமைப்பானது சுயமான நிலையாதாரத்துடன் இருக்க விருப்புடையதாக இருத்தல் வேண்டும்.**

## 8. மனித வளங்கள்

இவ்வழிகாட்டியானது மனித வளங்களை முகாமைத்தவம் செய்வதையும் வாடகைக்கு அமர்த்துவதற்குமான கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

8.1 **குடியியல் சமூக அமைப்பானது முடிவெடுப்பது தொடர்பில் அலுவலர்களையும் முகாமையாளர்களையும் வலுவூட்டல் வேண்டும்.**

8.1.1 அலுவலர்களை அவர்களுக்காக சிந்திக்க, பேசுவதற்கு மற்றும் செயற்பட வலுவூட்டல் மூலம்

8.1.2 எதிர்பார்க்கப்படும் விளைவுகள், கிடைக்கக் கூடியதான வளங்கள் போன்றவற்றை தொடர்புடைய சகல திறத்தவர்களுக்கும் குறிப்பிட்ட கால அடிப்படையில் தெளிவாகத் தொடர்பாடுவதன் மூலம்

8.1.3 தொடாபடைய சகல தகவல்கள் மற்றும் வளங்களை இலகுவாக அணுகச் செய்வதன் மூலம்

8.1.4 சிரேஷ்ட முகாமையாளர்கள், நிபுணர்களை இலகுவாக அணுகச் செய்தல் மூலம்

8.1.5 நிகழ்ச்சித்திட்டம் அல்லது செயற்றிட்டத்தின் சகல மட்டங்களிலும் வழிகாட்டலையும் ஆதரவையும் வழங்கல் மூலம்.

**8.2 குடியியல் சமூக அமைப்பானது அதிகார மையத்தின் செயற்பாடுகளை கண்காணித்து மதிப்பிடுவதுடன் அதனது அலுவலர்களுக்கு பொறுப்பாக தேவைப்படும் போது பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.**

8.2.1 உயர் மட்ட, துணைநிலை மற்றும் சக மட்டங்களிலான மீளளிப்பக்கள் உள்ளடங்கலான தொடர்ச்சியான பெறுபேற்று மதிப்பீடுகளை நடத்துதல் மூலம்

**8.3 குடியியல் சமூக அமைப்பானது அதனுடைய அலுவலர்களுக்கு முறையான பயிற்சியையும் அபிவிருத்தியையும் வழங்க வேண்டும்.**

8.3.1 ஒவ்வொரு அலுவலக அங்கத்தவருக்கும் தனிப்பட்ட அபிவிருத்திதி திட்டம் ஒன்றை வைத்திருப்பதன் மூலம்

8.3.2 புதிய அலுவலகர்களுக்கு அறிமுக வைபவம் ஒன்றை நடத்துதல் மூலம்

**8.4 குடியியல் சமூக அமைப்பானது ஒவ்வொரு அலுவலருக்கும் தெளிவாக வரையறுக்கப்பட்ட வகிபங்குகளையும் பொறுப்படைமைகளையும் கொண்டிருப்பதன் மூலம்**

- வேலையின் எல்லை, அதிகாரத்தின் எல்லைக்கான தெளிவான வரைவிலக்கணம் உள்ளடங்கலாக

**8.5 குடியியல் சமூக அமைப்பானது அதனுடைய முகாமைத்துவத்தில் அலுவலர்களின் ஜனநாயக பங்குபற்றுகைக்கான வாய்ப்பளித்தல் வேண்டும்.**

- முடிவெடுப்பதில் அர்த்தமுள்ள பங்குபற்றுகை உள்ளடங்கலாக

**8.6 குடியியல் சமூக அமைப்பானது சமத்துவமான வேலைவாய்ப்பை வழங்குவதாக இருத்தல் வேண்டும்.**

- கடுமையான பாரபட்சமற்ற வேலைக்கமர்த்தல் நடபடிகள்
- குடியியல் சமூக அமைப்பினுடைய பெறுமதிகள் மற்றும் கோட்பாடுகளுடன் ஒத்தியங்கக் கூடிய தனிப்பட்ட நபர்களை வேலைக்கமர்த்துதல்.

**8.7 குடியியல் சமூக அமைப்பானது நியாயமானதும் தகைமை அடிப்படையிலானதுமான சம்பள மற்றும் பதவியுயர்வுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

**8.8 குடியியல் சமூக அமைப்பானது சகல நியதிச்சட்ட கடப்பாடுகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்**

- நன்மைகள், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளடங்கலாக

**8.9 குடியியல் சமூக அமைப்பானது சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக ஊழியர்களுக்கு சுகாதார மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க வேண்டும்.**

**8.10 குடியியல் சமூக அமைப்பானது தனது ஊழியர்களிடையே வள ஆளுமை மற்றும் புத்தாக்க திறன்களை வளர்க்க வேண்டும்.**

**முடிவுரை**

இவ் அத்தியாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பொன் விதிகள் பாரிய கலந்துரையாடலுக்கு வழிவகுக்கும் என்று ட்ரான்ஸ்பரன்சி இன்டநஷனல் ஸ்ரீலங்கா நம்புகின்றது. அரச சார்பற்ற அமைப்பகளும் ஏனைய குடியியல் சமூக அமைப்புகளும் நாட்டில் அவற்றின் செயற்பாடு தொடர்பில் காணப்படும் இடைவெளியில் அவற்றின் ஆட்சியை பலப்படுத்தும் நோக்கத்திற்காக அறிமுகம் செய்யப்பட்டவையாகும். அத்தகைய விதிகளின் தொகுப்பானது குடியியல் சமூகதிதன் மத்தியில் செயலாற்றும் போது பொதுமக்களின் கண்களில் அரச சார்பற்ற அமைப்புக்களின் துலாம்பரமும் வகை கூறும் தன்மையும் பாரியதாக தெரியத்தக்கதாக அரச சார்பற்ற அமைப்புக்களின் நெறிமுறையை முன்னேற்றக் கூடியவையாகும். அத்தகைய கோட்பாடுகள் அவ்வாறு பின்பற்றப்படவில்லையாயின் அரசாங்கதின் பொறுப்புடைமையையும் துலாம்பரத்தையும் கேள்விக்குட்படுத்தும் கண்காணிப்பாளர்களாகவும் அறிவூட்டும் அமைப்புக்களாகவும் இருப்பதற்கான அரச சார்பற்ற அமைப்புகளின் உரிமையானது பாதிக்கப்படும்.